பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

23 03 2025 **SUNDAY** **7.15 PM**

ஆகாஷ்வாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையை அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் இரண்டு மடங்காக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2. மணிப்பூரில் அமைதியை நிலைநிறுத்துவதற்கான நடவடிக்கைகளில் முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளதாக மத்திய சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெஹ்வால் தெரிவித்துள்ளார்.

3. சத்திஷ்கரில் 2 பெண்கள் உட்பட 22 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

4. யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதலில் 7 பேர் உயிரிழந்தனர்

5. உலக கோப்பை **Sepak Takraw** சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

**<<<<<<>>>>>>>**

புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. **Jayant Choudhary** கூறியுள்ளார்.

வதோதராவில் உள்ள போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான கல்வி நிறுவனத்தின் வருடாந்திர தொழில்நுட்ப திருவிழாவில் காணொலி வாயிலாக அவர் உரையாற்றினார்.

தற்போது நாடுமுழுவதும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் புத்தொழில் நிறுவனங்கள் செயல்பாட்டில் உள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் இந்த எண்ணிக்கையை 2 லட்சத்து 40 ஆயிரமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் 5 கோடி வேலைவாய்ப்புகள் புதிதாக ஏற்படுத்தப்படும் என்றும் திரு. **Jayant Choudhary** கூறினார்.

<<<<<<>>>>>>>>

மணிப்பூரில் அமைதியை நிலைநிறுத்துவதற்கான நடவடிக்கைகளில் முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளதாக மத்திய சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெஹ்வால் கூறியுள்ளார்.

மணிப்பூர் உயர்நீதிமன்றத்தின் 12ஆம் ஆண்டு விழாவில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மணிப்பூரில் அமைதியை பராமரிக்க அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

<<<<<<>>>>>>>>

சாலை பாதுகாப்பு குறித்து கூடுதல் விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஏற்படுத்த வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சாலை பாதுகாப்பு குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற கார் பேரணியை மத்திய அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடுவுடன் இணைந்து தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

சாலை பாதுகாப்பு என்பது அனைவருக்கும் முக்கியமானது என்று அவர் குறிப்பிட்டார்.

உலக அளவில் சாலை விபத்துகள் அதிக அளவில் நம் நாட்டில் நடைபெறுவதாக அவர் தெரிவித்தார்.

இதனை குறைப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாகவும் திரு. கிரண் ரிஜிஜு கூறினார்.

<<<<<<>>>>>>>>

நம் நாட்டின் பாரம்பரிய கோலி சோடா தற்போது உலக அளவில் வரவேற்பை பெற்றுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது

அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா மற்றும் வளைகுடா நாடுகளுக்கும் கோலி சோடா ஏற்றுமதி செய்யப்படுவதாக தொழில் மற்றும் வர்த்தகத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சர்வதேச அளவில் கோலி சோடாவுக்கான வரவேற்பு தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>>**

ஒடிசாவில் மின்துறை வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் குறித்து மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர்லால் அம்மாநில அரசு அதிகாரிகளுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

மின் உற்பத்தியை அதிகரிப்பது, விநியோக கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது, பசுமை எரிசக்தி திட்டங்களுக்கு ஊக்கமளிப்பு குறித்து இந்த ஆலோசனையின் போது விரிவாக விவாதிக்கப்பட்டது.

**<<<<<<>>>>>>>**

சத்திஷ்கரில் 2 பெண்கள் உட்பட 22 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்துள்ளனர்.

11 லட்சம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்த, நக்ஸலைட்டுகள் சரணடைந்தவர்களில் அடங்குவர் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சரணடைந்தவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

இதற்கிடையே, **Bijipur - Bhopalpatnam** வழித்தடத்தில் சென்று கொண்டிருந்த பாதுகாப்புப் படையினர் மீது, நக்ஸலைட்டுகள் நடத்திய தாக்குதலில் இரண்டு மத்திய ரிசர்வ் காவல்படையினர் காயமடைந்தனர்.

**<<<<<<>>>>>>>**

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளில் 70 சதவீதம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக உத்ராகண்ட் முதலமைச்சர் திரு. **Pushkar Singh Dhami** கூறியுள்ளார்.

இன்று டேராடூனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியது தொடர்பான அறிக்கை வருடந்தோறும் வெளியிடப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

உத்ராகண்டில் பிஜேபி தலைமையிலான அரசு தொடர்ந்து இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டது வரலாற்றுச் சிறப்புமிக்கது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வழிகாட்டுதலின் பேரில், மாநிலத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சித் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு. **Pushkar Singh Dhami** கூறியுள்ளார்.

**<<<<<<>>>>>>>>**

போப் ஆண்டவர் ஃபிரான்சிஸ் ஐந்து வார இடைவெளிக்குப் பிறகு பொதுமக்களுக்கு ஆசி வழங்கினார்.

நிமோனியாவால் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், மருத்துவமனையில் உள்ள பால்கனியிலிருந்து பொதுமக்களுக்கு ஆசி வழங்கியதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

ரோமில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் இன்று வீடு திரும்பியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

**<<<<<<>>>>>>>>**

நேபாளத்தைச் சேர்ந்த தேர்தல் அதிகாரிகள் புதுதில்லியில் பயிற்சி பெற்றனர்.

தேர்தல் ஆணையத்தின் சார்பில் நடத்தப்பட்ட இரண்டுவார கால பயிற்சியில் அவர்கள் பங்கேற்றதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பூட்டானின் தேர்தல் ஆணையரும் இதில் கலந்து கொண்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>>>**

ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த இடத்திலிருந்து ஏராளமான ஆயுதங்களை பாதுகாப்புப் படையினர் பறிமுதல் செய்தனர்.

**Doda** மாவட்டத்திற்கு உட்பட்ட வனப்பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து, பாதுகாப்புப் படையினர் அப்பகுதியை சுற்றி வளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டபோது ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>>>

மகாராஷ்ட்ர மாநிலம் நாக்பூரில் 6 நாட்களுக்குப் பிறகு ஊரடங்கு முழுமையாக விலக்கிக் கொள்ளப்பட்டது.

கடந்த 14ஆம் தேதி நேரிட்ட வன்முறை சம்பவங்கள் காரணமாக, நாக்பூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது.

கடந்த 22ஆம் தேதி நான்கு இடங்களைத் தவிர இதர பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு விலக்கிக்கொள்ளப்பட்டது.

எஞ்சியுள்ள நான்கு பகுதிகளிலும் இன்று ஊரடங்கு விலக்கிக்கொள்ளப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இருப்பினும், இப்பகுதிகளில் காவல்துறையினர் கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

**Mahal** சந்தைப் பகுதியில் காவல்துறையினரின் கொடி அணிவகுப்பும் இன்று நடைபெற்றது.

<<<<<<>>>>>>>>

பிரபல தோட்டக்கலை ஆராய்ச்சியாளரும், பத்மஶ்ரீ விருது பெற்றவருமான **K.L. Chadha** இன்று புதுதில்லியில் காலமானார். அவருக்கு வயது 88.

வேளாண்மை மற்றும் தோட்டக்கலை தொடர்பாக 30-க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய அவருக்கு 2012ஆம் ஆண்டு பத்மஶ்ரீ விருது வழங்கப்பட்டது.

<<<<<<>>>>>>>>

யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதலில் 7 பேர் உயிரிழந்தனர்.

தலைநகர் **Kyiv** –யை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக யுக்ரைன் அரசு தெரிவித்துள்ளது.

இருநாடுகளுக்கும் இடையே சண்டை நிறுத்தம் தொடர்பான பேச்சுக்கள் நடைபெறவுள்ள நிலையில் ரஷ்யா இந்த தாக்குதலை நடத்தியுள்ளது.

இதற்கிடையே, யுக்ரைனின் 59 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாகவும், இதில் ஒருவர் உயிரிழந்ததாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>>>

உலக கோப்பை **Sepak Takraw** சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

பாட்னாவில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இநதியா வெள்ளிப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்தது.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவுக்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

<<<<<<>>>>>>>>

மியாமி ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – போர்ச்சுக்கலின் **Nuno Borges** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-4, 3-6, 10-7 என்ற செட்கணக்கில் இந்தியாவின் ரோஹன் போபன்னா – குரேஷியாவின் **Ivan Dodig** இணையை வென்றது.

<<<<<<>>>>>>>>

ஆசிய கோப்பை கூடைப்பந்து போட்டியில் பங்கேற்க இந்தியா தகுதி பெற்றுள்ளது.

மனாமாவில் நடைபெற்ற இதற்கான தகுதிச்சுற்று போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா 81-77 என்ற புள்ளிக்கணக்கில் பஹ்ரைனை வென்றது.

இதன்மூலம் இந்தியா ஆசிய கோப்பை கூடைப்பந்துப் போட்டியில் பங்கேற்க தகுதி பெற்றது.

இப்போட்டி சவுதி அரேபியாவில் ஆகஸ்ட் மாதம் 5ஆம் தேதி தொடங்கி, 17ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>>>>

உலக மாஸ்டர்ஸ் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா 2 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

துருக்கியின் **Antalya-**வில் நடைபெற்ற இப்போட்டியில், 30 வயதுக்கு மேற்பட்ட ஆடவர் இரட்டையர் பிரிவில் **Lakshit Sood – Chandril Sood** இணை வெள்ளிப்பதக்கம் வென்றது. இப்பிரிவின் குழுப் போட்டியிலும் இந்தியாவிற்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

35 வயதுக்கு மேற்பட்ட கலப்பு இரட்டையர் பிரிவில் **Jitin Bishnoi – Akshitha Basavaraju** இணையும், ஆடவர் இரட்டையர் பிரிவில் **Mishal Javia – Kartikeya Singh Verma** இணையும் வெண்கலப்பதக்கம் வென்றது.

**<<<<<<>>>>>>>>**

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலக கோப்பை கபடி போட்டி இறுதியாட்டத்தின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

**<<<<<<>>>>>>>>**

ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று மும்பை அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில், டாஸ் வென்ற சென்னை அணி முதலில் பந்து வீச தீர்மானித்தது.

**<<<<<<>>>>>>>>**

புதுதில்லியில் நடைபெற்று வரும் கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டியில் தமிழகம் 24 தங்கம், 12 வெள்ளி, 20 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.

**<<<<<<END>>>>>>>**